
மடத்தலைவர் பெரியார்



நக்கீரர் பதிப்பகம்

மடத்தலைவர் பெரியார்

ஆர். உமாகாந்தன்

எழுதியது.

நக்கீரர் பதிப்பகம்

தியாகராய நகர் — சென்னை 17..

முதற் பதிப்பு : ஏப்ரல் 1949

விலை அணா ஆறு

ஜீவோதயம் அச்சகம், சென்னை-5

அறிவிப்பு!

★

"இந்தப் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்து யாராவது விபரீதமாக அர்த்தம் செய்து கொண்டு, வீணாக நம் மீது ஆத்திரப் படுவார்களே! ஆகையால், இந்தத் தலைப்பு, ஈ. வெ. ரா வின் மூளையைக்குறை கூறுவதல்ல; அவரது பதவியைக் குறிப்பிடுவது தான் என்பதை முன்னுரையிலாவது விளக்கி எழுதிவிடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் நக்கீரர் பதிப்பகத்தின் நிர்வாகி. அவ்வாறு புத்தகத்தலைப்புக்கு விளக்கவுரை கூறுவது எங்கப்பன் குதிருக்குள் இல்லை! என்பது போல் ஆகிவிடுமோ என்ற சந்தேகம் எனக்குத் தோன்றியது. ஆயினும், வாசகர்கள் அப்படி நினைத்து குழப்பமடையக் கூடாது என்பதற்காகவே இதை எழுதுகிறேன். திராவிடக் கழகத்தை "நாஸ்தீகமடம்" என்றும், ஈ. வெ. ரா. வை அந்த மடத்தின் தலைவர் என்றும் வர்ணித்தே இந்நூலுக்கு "மடத்தலைவர் பெரியார்" எனும் மகுடத்தைச் சூட்டியுள்ளேன். இது முற்றிலும் உண்மை! சந்தேகமே வேண்டாம்!

மேலும், ஈ. வெ. ரா. வின் அறிவு நிலையைப் பற்றி நான் இன்னும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. ஏனெனில் அரசியல், பொருளாதாரம், சமூகம் ஆகியவற்றில் அவர் படுசூனியமாயிருப்பினும், ஆயிரக்கணக்கான மனிதப் பிறவிகளின் உடலையும் உள்ளத்தையும் இருட்டாக்கி வைத்துக் கொண்டு, தன் இஷ்டப்படி ஆட்டிவைக்கிறாரல்லவா! பல பைத்தியங்களைச் சேர்த்து வைத்து

அடக்கியாளுவதென்றாலும், அதற்குங்கூட ' ஒரு விதமான புத்தி சாலித்தனம் ' கொஞ்சமாவது இருக்கத்தானே வேண்டும்! ஆகவே, இந்தத்தலைப்பு, ஈ. வெ. ரா. அவர்களை மூளையற்றவ ரென்று குறிப்பிடுவதாக யாராவது எண்ணிக் கொண்டால், அதற்கு நாங்கள் பொறுப்பாளிகளல்ல.

இந்துமதஸ்தாபனப் பாதுகாப்பு மசோதாபற்றி ஓமந்தூரார், டாக்டர் ராஜன், சிவஞானக் கிராமணியார், கோசல்ராம், மாதவ மேனன், நெடுஞ்செழியன், அண்ணாதுரை முதலியோர் வெளி யிட்ட பலப்பல கருத்துக்களையும் மனதில் கொண்டு, அவற்றின் ஆராய்ச்சி ஆதாரமாகவும், வாதப்பிரதிவாத மறு மொழிகளாகவும் விளக்கியே இந்தநூலை வரைந்துள்ளேன். ஆகையால், பிற ருடைய கருத்துக்களை இதில் கையாண்டிருப்பதாக யாரும் எண்ணக் கூடாது.

1—4—49
சென்னை.

ஆர். உமாகாந்தன்

நிற்கு இதுவரை கணக்கு வெளியிடவில்லை ! இன்னும் சேர்த்துக் கொண்டேயிருக்கின்றனர் !

திராவிடக்கழகத்தார் நடத்திய திருக்குறள் மகாநாட்டுக்கு பதினாயிரக் கணக்கான மக்கள் வந்து குவிந்ததாக தமது பத்திரிகைகளிலேயே செய்தி வெளியிட்டனர். ஆனால் அதற்கு ஒரு ஆளுக்கு 1 ரூபாய்க்கு மேற்பட்ட கட்டணம் வசூலித்திருந்தும், மொத்தம் 4200 சொச்சம் ரூபாய் வசூல் என்றும், அதில் 2800 சொச்சம் ரூபாய் செலவு போக பாக்கி 1400 ரூபாய் தான் மீதமென்றும் கணக்கு காட்டினர் !

இதுபோலவே, ஈரோட்டில் சென்ற அக்டோபர் மாதத்தில் நடத்திய திராவிடக்கழக தனிமாகாண மகாநாட்டின் மூலமும் ஏராளமான பணம் வசூலித்தனர். போஷகர்களுக்கு 100 ரூபாய் முதல், பார்வையாளர்களுக்கு 2 ரூபாய் வரையில் பலதரமான கட்டணங்கள் வைத்து பணம் குவித்தனர். இந்த மகாநாட்டுக்கு 50000 பேர் வந்ததாக அவர்களுடைய பத்திரிகைகளிலேயே விளம்பரப்படுத்தினர். அத்தனை பேருக்கும் கடைசிதரமான 2 ரூபாய் டிக்கெட் வீதமே வைத்து கணக்கு பார்த்தாலும் ஒரு லட்ச ரூபாயாவது வசூலாகியிருக்க வேண்டும். ஆனால், இது பற்றி வரவு விவரம் எதுவுமே தெரிவிக்காமல் இந்த மகாநாட்டில் வரவு செலவு போக "10000 ரூபாய் மீதி" என்று மட்டும் 23-10-48 "விடுதலை"யில் மொட்டையாக அறிவித்து விட்டனர்!

அவர்களே சொல்லுகிறார்கள்!

இவ்வாறு திராவிடக்கழகத்தலைவர் அயோக்கியத்தனம் செய்வதைக் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல; அந்தக் கருஞ்சட்டைத் தோழர்கள் சிலரே சொல்லுகிறார்கள். கோவையிலுள்ள திராவிடக்கழகக்காரர்கள் சிலர் வெளியிட்டுள்ள ஒரு துண்டு நோட்டீஸைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். படித்துப் பாருங்கள்:

திராவிடர் கழகத் தோழர்களுக்கு ஓர் அறிவிப்பு.

திராவிடர் கழகம் அமைப்பு முறையுடனும், சட்டதிட்டங்களுடனும் நடைபெற வேண்டுமென்றும், தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், மற்றும் பல நிர்வாகக் கமிட்டியினர்களை தேர்தல் மூலமாகவே தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற எங்களுடைய எண்ணத்தின் விளைவே இந்த வெளியீடு.

இதுவரையில் திராவிடர் கழகத்தாராகிய நாங்கள் வெளிப்படையாக கூறிப் பயனற்றுப் போனதையும், மறைமுகமாகச் சுட்டிக் காட்டியதை மறைமுகமாகவே மறைத்து வந்ததையும் வெளிக்குக் கூருமல் மனதிலே நினைத்து நினைத்து வருந்தி புண்பட்ட நெஞ்சோடு வெளியிடுகிறோம்.

1. பொதுமக்கள் நமது கட்சியை தற்குறி கட்சியென்றும், முட்டாள்களின் கட்சி என்றும் சொல்லிக் கொண்டு வந்த காலத்தில் அதற்கு விடையாக ஈ. வே. ராமசாமி அவர்கள் பல கூட்டங்களில், எப்பக்கம்பார்த்தாலும் நம் கட்சியில் B. A., B. A. Hons., M. A, பட்டதாரிகளும் அறிவாளிகளும் சூழ்ந்து இருக்கிறார்கள் என்று பெருமையுடன் சொல்லிக்கொண்டு வந்தவர், தூத்துக்குடி மகா நாட்டில் 'நமக்கு அறிவாளிகள் கூட்டம் வேண்டாம், முட்டாள் கூட்டம் இருந்தால் போதும்' என்று கூறினால் கழகத் தோழர்களாகிய நாம் எப்படி ஆதரிக்க முடியும்?

2. திருச்சி மாகாண மகாநாட்டில் கட்சியின் தொகை சுமார் ரூ. 32000-0-0 தம்மிடம் இருப்பதாகக் கூறிய ஈ. வெ. ரா. இப்பொழுது அந்தத் தொகை என்ன வாயிற்று என்று தெரியாது; தெரிவிக்கவில்லை!

3. ஷை திருச்சி மாகாண மகாநாட்டில் கட்சிநிதிக்கு ரூ. 50000-0-0 வசூலிப்பதாகத் தீர்மானித்தபடி ஷை தொகையும் வசூலான பிறகு ஷை தொகையை ஈ. வெ. ரா. தாமே வைத்துக் கொண்டு தம் வார்த்தைக்கு அடங்கி நடக்கும் நான்கு பேரை எடுத்துக் கொண்டு கமிட்டி என்று பெயர் வைத்து தம்இஷ்டப்படி தாமும் மாதாமாதம் ரூ 500 எடுத்துக் கொண்டு செலவு செய்து வருகிருர்.

4. இருபத்தைந்து ஆண்டுகளாக இயங்கிவரும் நமது கட்சிக்காக, பொப்பிலி ராஜா இனமாகக் கொடுத்த விடுதலைப் பத்திரிகையும், அச்சகமும் ஈ. வெ. ரா. அவர்கள் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, திராவிடர் தினசரியாகத்தான் வெளிவருகிறதே தவிர திராவிடர் கழகத் தினசரியாக ''விடுதலை'' வெளிவராததின் காரணம் என்ன?

5. நம் கட்சித் தோழர்கள் ஈ. வெ. ரா. வை நேரில் கண்டு கட்சியின் நிலைமையைப் பற்றிப் பேசுகிற காலத்தில், நம்முடைய கட்சியில் நம்பத்தகுந்தவர்கள், பொறுப்புள்ளவர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்லுகிருர். அப்படிச் சொல்லியவர் K. A. மணியம்மையைமட்டும் நம்பி விடுதலைபத்திரிகைக்கு உரிமையாளரும் ஆசிரியருமாக்கிய மர்மம் என்ன?

6. கட்சியின் நலனைக் கருதி கொள்கையைப் பரப்ப தோழர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் G. D. நாயுடுவிடம் பெற்று வந்த மாதம் ரூபாய் 150-0-0யும் விட்டு ஈ. வெ. ரா. அவர்களின் கட்சியின் பேச்சாளராக அழைத்து மாதம் ரூ 100-0-0 கொடுப்பதாகச் சொல்லி பிறகு ரூ 75-0-0 மட்டும் கொடுத்தும் கொள்கைக்காக ஓராண்டு இடைவிடாது உழைத்த தோழரை ''ஊதியம் பெற்று கட்சியின் பிரசாரம் செய்த தோழர் இரா. நெடுஞ்செழி

3. ஷை திருச்சி மாகாண மகாநாட்டில் கட்சி நிதிக்கு ரூ. 50000-0-0 வசூலிப்பதாகத் தீர்மானித்த படி ஷை தொகையும் வசூலான பிறகு ஷை தொகையை ஈ. வெ. ரா. தாமே வைத்துக் கொண்டு தம் வார்த்தைக்கு அடங்கி நடக்கும் நான்கு பேரை எடுத்துக் கொண்டு கமிட்டி என்று பெயர் வைத்து தம்மிஷ்டப்படி தாமும் மாதாமாதம் ரூ 500 எடுத்துக் கொண்டு செலவு செய்து வருகிறார்.

4. இருபத்தைந்து ஆண்டுகளாக இயங்கிவரும் நமது கட்சிக்காக, பொப்பிலி ராஜா இனாமாகக் கொடுத்த விடுதலைப் பத்திரிகையும், அச்சகமும் ஈ. வெ. ரா. அவர்கள் தமக்குச் சொந்தமாக்கிக் கொண்டு, திராவிடர் தினசரியாகத்தான் வெளிவருகிறதே தவிர திராவிடர் கழகத் தினசரியாக ''விடுதலை'' வெளிவராததின் காரணம் என்ன?

5. நம் கட்சித் தோழர்கள் ஈ. வெ. ரா. வை நேரில் கண்டு கட்சியின் நிலைமையைப் பற்றிப் பேசுகிற காலத்தில், நம்முடைய கட்சியில் நம்பத்தகுந்தவர்கள், பொறுப்புள்ளவர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்லுகிறார். அப்படிச் சொல்லியவர் K. A. மணியம்மையைமட்டும் நம்பி விடுதலைபத்திரிகைக்கு உரிமையாளரும் ஆசிரியருமாக்கிய மர்மம் என்ன?

6. கட்சியின் நலனைக் கருதி கொள்கையைப் பரப்ப தோழர் இரா. நெடுஞ் செழியன் அவர்கள் G. D. நாயுடுவிடம் பெற்று வந்த மாதம் ரூபாய் 150-0-0யும் விட்டு ஈ. வெ. ரா. அவர்களின் கட்சியின் பேச்சாளராக அழைத்து மாதம் ரூ 100-0-0 கொடுப்பதாகச் சொல்லி பிறகு ரூ 75-0-0 மட்டும் கொடுத்தும் கொள்கைக்காக ஓராண்டு இடைவிடாது உழைத்த தோழரை "ஊதியம் பெற்று கட்சியின் பிரசாரம் செய்த தோழர் இரா. நெடுஞ்செழி

யன் விலகிவிட்டார்" என்று தினசரி பத்திரிகையில் அறிவித்த ஈ. வெ. ரா. அவர்கள் தாம் மட்டும் தம் இஷ்டப்படி கட்சியின் தொகையிலிருந்து மாதா மாதம் ரூ 500-0-0 வரை எடுத்துக் கொள்வது மட்டும் ஊதியமல்லவா?

ஈ. வெ. ரா. பேச்சில் முரண்பாடு

7. திராவிட நாட்டை அடைந்தே தீருவோம் என்று பேசிக் கொண்டு வந்த ஈ. வெ. ரா. அவர்கள் தூத்துக்குடி மகாநாட்டில் 'திராவிடர் கழகம், அரசியல் கட்சியல்ல; பிரசார இயக்கமே' என்று பேசியிருக்கிறார். மிப்படிப் பேசியிருக்கும் ஈ. வெ. ரா. அவர்கள் அரசியல் கொள்கையாகிய திராவிட நாட்டுப் பிரிவினை நாள் 1-7-48ல் கொண்டாடினர்.

மதம் மனிதனை மடையனாக்குகிறது என்றும், மதம் இல்லாமல் மனிதன் உயிர் வாழலாம் என்றும், பிரசாரம் செய்து வந்த ஈ. வெ. ரா, அவர்கள் கும்பகோணம் நிதியளிப்புக் கூட்டத்தில் "திராவிட நாடு அடையாவிட்டால் நாம் எல்லோரும் இஸ்லாம் மதத்தில் சேருவதைத் தவிர வேறு வழியில்லை. இதைத் தீர்க்கமாக யோசித்தே முடிவுக்கு வந்திருக்கிறேன்" என்று பேசியிருக்கிறார்.

ஆட்சியாளருக்கு நமது கட்சியின் கொள்கைகளுக்கு மாறுபட்ட அபிப்பிராயமாகிய 'காந்தி மதம், காந்தி நாடு என்று ஏற்படுத்துவது நல்லது' என்று தெரிவித்திருக்கிறார். மேலே தெரிவித்தவைகளை யெல்லாம் நம் கட்சித் தோழர்களிடம் கலந்து ஆலோசியாமலும் கமிட்டியின் முடிவு இல்லாமலும் சொன்னவைகளே. இவைகளை யெல்லாம் நாம் எப்படி ஆதரிக்கமுடியும்?

8. நம் இளைஞர்கள் பொறுமைக் காரர்களின் விஷமப் பிரசாரத்திற்கு இடங்கொடுத்து வருவார்களேயானால் நான் கழகத்தைக் கலைக்க கொஞ்சமும் தயங்கமாட்டேன். யாரை வேண்டுமானாலும் தூக்கிக் கொண்டு கூத்தாடும் பழக்கத்தை விட்டுவிட வேண்டும் என்று தூத்துக்குடி மகாநாட்டில் ஈ. வெ. ரா, அவர்கள் பேசியிருக்கிறார். இதன் பொருள் என்ன என்பதை நன்றாய் யோசனை செய்து பாருங்கள். என்னைத் தவிர வேறு ஒருவரையும் தூக்கிக் கொண்டு கூத்தாட வேண்டாம் என்பது நன்றாய் விளங்கவில்லையா? ஒருகட்சியின் தலைவரா இவ்வாறு பேசுவது? இவ்வாறு பேசுவது சர்வாதிகாரியா? ஒரு கட்சியின் தலைவரா ?

9. ஈ. வெ. ரா. அவர்கள் திருமணங்களுக்கும் வேறு சில கூட்டங்களுக்கும் 100 ரூபாய் வரை பீஸ் பெற்றுக் கொண்டு செல்லுகிறார். இவ்வாறு செல்லும் ஈ. வெ. ரா. வுக்கும் புராணப் பிரசங்கிகளுக்கும் வித்தியாசம் என்ன ?

நிற்க, கொள்கைக்காக கட்சியா ? கட்சிக்காகத் தலைவரா ? அல்லது தலைவருக்காக கட்சி ; தலைவருக்காக கொள்கையா ? மேலே குறிப்பிட்ட குறைபாடுகளுடன் கட்சியின் தலைவர் இருந்து வருவதால் கட்சியில் பாடுபட்ட அறிவாளிகளும், பேச்சாளர்களுமாகிய C. A. அய்யாமுத்து, ப. ஜீவானந்தம், R. கிஸன் R. இராகவன், முத்துசாமிவல்லத்தரசு, நீலாவதி ராமசுப்ரமணியம், S. ராமநாதன் ஆகியவர்களையும் இன்னும் பல தோழர்களையும் இழக்க நேரிட்டதைக் கண்டு நம் தோழர்களின் மனம் வருந்தும் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை. மற்றும் இன்றைய நிலைமையில் சௌந்திர பாண்டியன், V. V. ராமசாமி, K. A. P, விஸ்வநாதம், N, R, சாமியப்பா, பொன்னம்

பலஹுர், C. N. அண்ணாதுரை, சம்பத், இரா. நெடுஞ்செழியன், க. அன்பழகன் ஆகிய அறிவாளர்களும் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் விலகி நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறதென்று தெரியும்போது தோழர்கள் வருந்தாமல் இருக்க முடியாது. இந்த நிலையே இனி மேலும் கட்சியில் இருந்தால் திராவிடக் கழகத்தாராகிய நமக்கு எப்படி நன்மை பயக்கும்? ஆகையால் தோழர்கள் இவற்றையெல்லாம் சிந்தித்து சீர்தூக்கி ஒரு நல்ல முடிவைக்கண்டு, பிரிந்து நிற்கும் அறிவாளர்களையும் பேச்சாளர்களையும் ஒன்று கூட்டி ஆக்கவேலைகள் ஆக்குவதாக்கி நலன்பயக்க வேண்டுகிறோம்.

குறிப்பு:—நாங்கள் இதை வெளியிட்டதன் நோக்கம் மேலே குறிப்பிட்ட நோக்கமுள்ள தலைவரைப்போல் வேறெவருமே தோன்றக் கூடாது, மற்றும் எந்தக் கட்சியிலும், எந்த நாட்டிலும் எந்தக் காலத்திலும் தோன்றக் கூடாது என்பதாகும்.

இப்படிக்கு

M. பட்டிலிங்கம், I. கோவிந்தசாமி
N. சொக்கலிங்கம், S. இராசு,
S. P. இராமசாமி, G. C. துரைசாமி,
கர்தசாமி,

கோவை,
2-7-48

இவ்வாறு அவர்களுடைய கட்சிக்காரர்களே 'பிட்ரோட்டீஸ்' வெளியிட்டிருக்கிறார்களென்றால், பெரியார் கும்பலின் பணச் சண்டையைப் பற்றி நாம் தனியாக இன்னும் என்ன கூற வேண்டும்?

செயலளவில் நாட்டுக்கு ஒரு நன்மையும் செய்யாமலிருந்து கொண்டே இப்படிப் பலப்பல வழிகளாலும் நிதிச்சுரண்டல் செய்து கொழுக்கும் திராவிடக் கழகத்தார், மற்ற கட்சிகளின் வரவு செலவைப் பற்றி கேள்வி போடுவதில்மட்டும் தயங்குவதில்லை. காந்திஹரிஜன் நிதிப்பணம் எங்கே? கஸ்தூரிபாய் நிதிப்